செ.வெ.எண்:375/2009(செமதொஅ) நாள். 03.11.2009

**அரசு உணவு மானியத்திற்கு ரூ.3500 கோடியாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது - மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பேச்சு.**

காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் ரயில் நிலையம் அருகில் 02-11-2009 அன்று உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் மாநில நுகர்வோர் தொலைத் தொடர்பு உதவி மையம் தொடக்க விழா, நியாய விலை கடைகளுக்கு மின்னனு பட்டியல் இயந்திரம் வழங்கும் விழா, 251 நியாய விலைக்கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டும் பணி தொடக்க விழா, இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு வழங்கும் விழா மற்றும் தாம்பரம் உதவி ஆணையர் அலுவலக புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்த விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மாநில நுகர்வோர் தொலைத் தொடர்பு உதவி மையத்தை தொடங்கி வைத்து, நியாய விலை கடைகளுக்கு மின்னனு பட்டியல் இயந்திரங்களை வழங்கி, 251 நியாய விலைக்கடைகளுக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை தொடங்கி வைத்து, இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு வழங்கி, தாம்பரம் உதவி ஆணையர் அலுவலக புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி விழா பேரூரையாற்றியதாவது,

நியாய விலைக்கடைகளில் போலி பட்டியல் தயாரிப்பதை தடுக்கவும், பொதுமக்களுக்கு பொருட்கள் உரிய முறையில் வழங்கப்படுகிறதா என்பதை கணினி மூலம் கண்காணிக்கவும், சென்னை நகரில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் மின்னனு பட்டியல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. படிப்படியாக தமிழகத்தில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் மின்னனு பட்டியல் இயந்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பொது விநியோக திட்டத்தின் கீழ் 30,394 நியாய விலைக்கடைகள் இயங்கி வருகின்றன. இன்றைய விழாவில் ரூ.8 கோடியே 78 இலட்சம் செலவில் 251 நியாய விலைக்கடைகளுக்கு புதியதாக சொந்த கட்டடங்கள் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தற்போது துணை முதலமைச்சர் பொறுப்பில் உள்ள நான் 2006ம் ஆண்டு உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோது முதலமைச்சர் அவர்கள் என்னிடம் கிராமம் கிராமமாக சென்று மக்களின் குறைகளை கேட்டறிந்து நல்லாட்சியை தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நானோ, அமைச்சர்களோ வெளியூர் பயணம் மேற்கொள்வதாக இருந்தால் முதலமைச்சரிடம் அனுமதி வாங்கி செல்வது தான் வழக்கம். இதன்படி ஒருமுறை 4 நாட்கள் வெளியூர் பயணம் செல்ல இருக்கிறேன் என்று முதலமைச்சரிடம் தெரிவித்தப்போது எனது தாயார் அருகில் இருந்தார். அவர் தாய் பாசத்தோடு இப்படி ஊர் ஊராக செல்கிறாயே. உன் உடல் நலம் என்னாவது என்று கேட்டார். அதற்கு முதலமைச்சர் அவர்கள் ஊர் ஊராக செல்ல வேண்டும் என்பதால் தான் இவருக்கு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் பொறுப்பை வழங்கியுள்ளேன் என்று கூறினார்.

உணவுத்துறை அமைச்சருடைய செல்போன் நம்பர் அனைத்து நியாய விலைக்கடைகளிலும் எழுதி வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் எந்த குறையாக இருந்தாலும் அமைச்சரை நேரடியாக தொடர்பு கொள்ளலாம். நான் கூட இதனை சோதிக்க பல ஊர்களில் இருந்து வேறு தொலைபேசியிலிருந்து அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளேன். அவர் உடனே அனைத்து தொலைபேசி அழைப்புகளுக்கும் பதிலளித்தார். இதனை நான் பாராட்டுகிறேன்.

சென்ற ஆண்டு உணவு மானியத்திற்கு ரூ.2900 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ.3500 கோடி வரை உயர்த்த முதலமைச்சர் அவர்கள் உத்தேசித்துள்ளார். நம்முடைய இளைஞர் அணி சார்பாக பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பள்ளி மாணவன் ஒருவன் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் வழங்கும் சாதனை குறித்து பேசினான். மகாத்மா காந்தியை தேசத்தந்தை என்று கூறுகிறோம். அதை, தேசத்தின் தந்தை மகாத்மா காந்தி. ரேஷனின் தந்தை டாக்டர் கலைஞர் என்றான். இது என் மனதில் ஆழமாக பதிந்தது. இவ்வாறு உணத்துறையின் செயல்பாடுகள் முதலமைச்சர் கலைஞர் ஆட்சியில் சிறப்பாக உள்ளது. மக்களின் உணர்வுகளைப் புரிந்து தேவைகளை அறிந்து செயல்படும் அரசாக முதலமைச்சர் கலைஞர் அரசு விளங்கி வருகிறது என கூறினார்.

விழாவிற்கு மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமை தாங்கி பேசினார். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.இராஜா ஆகியோர் முன்னிலையுரையாற்றினார்கள். தாம்பரம் நகரமன்றத்தலைவர் திரு.எ.மணி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு முதன்மை செயலர் திரு.க.சண்முகம் இ.ஆ.ப., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார். உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு.த.துரைசாமி, மரபுசாரா எரிசக்தி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.த.விசுவநாதன், நகரமன்ற துணைத்தலைவர் திரு.டி.காமராஸ், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.யத்தீந்திரநாத் ஸ்வேன் இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் திரு.எம்.வீரசண்முக மணி இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிமணியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். விழாவின் முடிவில் உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.க.ராஜராமன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். விழாவில் ஏராளமான மகளிர் சுய உதவிக்குழுக்கள், உள்ளாட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்